SARVATRA VIJAYAM

# தினமணி

## கிராமப்புறங்களில் உள்ளவர்களாலும் விளையாட்டில் சாதிக்க முடியும்

### கிரிக்கெட் வீரர் பாலாஜி பேச்சு



புதுகும்மிடிப்பூண்டியில் எம்.எல்.ஆர். கிரிக்கெட் அகாதெமியை தொடங்கி வைத்தார் இந்திய கிரிக்கெட் வீரர் எல்.பாலாஜி.

**கும்மிடிப்பூண்டி, அக்.11:** திறமையும், சாதிக்க வேண்டும் என்ற வெறியும், அதற்கான முயற்சியும் இருந்தால், கிராமப்புறங்களில், உள்ளவர்கள்கூட விளையாட்டில் சாதிக்க முடியும் என்று புது கும்மிடிப்பூண்டியில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற கிரிக்கெட் அகாதெமியின் தொடக்க விழாவில் கிரிக்கெட் வீரர் எல். பாலாஜி கூறினார்.

கும்மிடிப்பூண்டியை அடுத்த புதுகும்மிடிப்பூண்டியில் எம்.எல்.ஆர். கிரிக்கெட் அகாதெமியின் திறப்பு விழா நடைபெற்றது. விழாவுக்கு புது கும்மிடிப்பூண்டி ஊராட்சி மன்றத் தலைவர் மா.செல்வராஜ் தலைமை தாங்கினார்.

கும்மிடிப்பூண்டி ஒன்றிய கவுன்சிலர் கே.தருமன், பேராசிரியர் வ.விஜயரங்கன் வ.விஜயரங்கன் முன்னிலை வகித்தனர். விழாவை இந்துஸ்தான் பெட்ரோலியம் நிறுவனத்தில் தென் மண்டல ஆய்வு மேலாளர் ஜி.ராமதாஸ் தொடங்கி வைத்தார்.

விழாவில் சென்னை பெவிலியன் ஸ்போர்ட்ஸ் உரிமையாளர் சந்திரகுமார் சோப்படா, கும்மிடிப்பூண்டி அம்பிகா உட் நிறுவனத்தைச் சேர்ந்த அருண் எஸ். பட்டேல், ஏ.ஆர்.எஸ். மெட்டல் நிறுவன பொது மேலாளர் சி.வி.எஸ்.மூர்த்தி ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

விழாவில் சிறப்பு விருந்தினராக கலந்துக் கொண்ட தமிழகத்தைச் சேர்ந்த கிரிக்கெட் வீரர் லஷ்மிபதி பாலாஜி பேசுகையில், 'இந்திய கிரிக்கெட் அணியின் தற்போதைய கேப்டன் தோனி, உலக கோப்பையை இந்தியாவுக்கு பெற்றுத் தந்த புகழ் பெற்ற இந்திய கிரிக்கெட் அணி கேப்டன் கபில்தேவ் உட்பட பலர் கிராமப்புறப் பகுதியில் இருந்து வந்தவர்கள்.

எனவே திறமையும், சாதிக்க வேண்டும் என்ற வெறியும் அதற்கான முயற்சியும் இருந்தால் கிராமப்புறங்களில் உள்ளவர்கள் கூட விளையாட்டில் சாதிக்க முடியும் என்றார்.

மேலும் கிரிக்கெட் வீரர் எல்.பாலாஜியை பேட்டி எடுத்த போது, 'பாகிஸ்தான் ராவல்பிண்டியில் 2004-ம் ஆண்டு ஏப்ரல் 13-16 அன்று நடந்த இந்தியா - பாகிஸ்தான் கிரிக்கெட் தொடரில் கடைசி டெஸ்ட் மேட்சில் தான் 7 விக்கெட்டுகளை வீழ்த்தி 50 ஆண்டுகளுக்கு பிறகு பாகிஸ்தான் மண்ணில் டெஸ்ட் தொடரை வென்றதற்கு தனது பங்களிப்பும் இருந்ததை தனது சிறந்த மேட்சாக கூறினார்.

மேலும் காயம் காரணமாக 3 ஆண்டுகள் கிரிக்கெட் விளையாடாமல் இருந்து தற்போது மீண்டும் இந்திய அணியில் இடம்பெற்று விளையாட வேண்டும் என்ற இலக்குடன் தீவிர பயிற்சி எடுத்து வருவதாகவும், தற்போது இந்திய அணியில் இடம் பெற ஆரோக்கியமான போட்டி உள்ளதால் அதற்கு தக்கவாறு தன்னை தயார் செய்து விரைவில் இந்திய அணியில் இடம் பெறுவேன் என்றார்.

## தேர்வாய்
## எதிர்த்து

**கும்மிடிப்பூண்டி, அக்.11:** கு
பூண்டியை அடுத்த தேர்வாய்
யில் அமைக்கப்பட்டு வரும் சி
தொழிற்பேட்டையை எ
தேர்வாய் பகுதியைச் சேர்ந்த
ஞாயிற்றுக்கிழமை விழிப்
நடைப்பயணம் மேற்கொண்

கும்மிடிப்பூண்டியை
தேர்வாய் பகுதியில் உள்ள 1,2
கர் அளவுள்ள காட்டை
அதில் சிப்காட் தொழி
டையை தமிழக அரசு அ
அதற்கான பணிகள் நடை
வருகிறது.

இந்நிலையில் தேர்வாய்
யில் சமூக காடுகளை அழித்
காட் தொழிற்பேட்டை ஏற்ப
பட்டு உள்ளதாகவும், தேர்வா
பட 18 பகுதிகளைச் சேர்ந்த
மக்களை பாதிக்கும் வகையி
காட் தொழிற்பேட்டை ஏற்ப
பட்டு உள்ளதென கூறி தே
பகுதியைச் சேர்ந்த தேர்வாய்
முன்னேற்றச் சங்கத்தினர்
புணர்வு நடைப்பயணத்தை
கொண்டனர்.

இந்த நடைப்பயணத்தை
நாடு அமைப்பு சாரா தெ
ளர் கூட்டமைப்பின் தலைவ
தொடங்கி வைத்தார்.

இந்த விழிப்புணர்வு பயண
தலித் மண்ணுரிமை கூட்ட
தலைவர் நிக்கோலஸ், விடு
சிறுத்தைகள் கட்சியின் மாவ
செயலர் பாலசிங்கம், பகுஜன்
கட்சியின் மாவட்டத் தலைவ
யார் அன்பன், ம.தி.மு.க. ஒ
செயலர் பாபு, சமூக சேவை அ

pricol

**பிரிக்கால் லிமிடெட்**

பதிவு அலுவலகம் : 702/7, அவிநாசி சாலை, கோயமுத்தூர்–641 037.

**அறிவிப்பு**

பங்கு வர்த்தக மையங்களுடன் செய்து கொண்ட ஒப்பந்தத்தின் 41–வது ஷரத்தின்படி, **புதன்கிழமை, 27–அக்டோபர்–2010** அன்று நடைபெறவுள்ள இந்நிறுவனத்தின் இயக்குநர்கள் குழுக் கூட்டத்தில், மற்றும் பிற விஷயங்களுடன் 30–செப்டம்பர்–2010 அன்றுடன் முடிவடைந்த காலாண்டு மற்றும் அரையாண்டிற்கான தணிக்கை செய்யப்படாத நிதிநிலை அறிக்கைகள் பரிசீலிக்கப்பட்டு பதிவில் எடுத்துக் கொள்ளப்படும் என அறிவிக்கப்படுகிறது.

பிரிக்கால் லிமிடெட்டிற்காக,
11.10.2010 த.கெ.தமிழன்பன்
கோயமுத்தூர் நிறுவனச் செயலாளர்